## தூத்துக்குடி மாவட்டம்
## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
## மாவட்ட இயக்க மேலாண்மை அலகு
## அறிவிப்பு
## வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் காலிப்பணியிடங்களுக்கான நேரடி நியமனம்

ந.களண் அ5/397/2025 நாள் 09.2026

தூத்துக்குடி மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட தகுதியான பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பதவியின் பெயர் | வட்டார ஒருங்கிணைப்பாளர் |
|---|---|---|
| 1. | வயது வரம்பு –01.07.2026 அன்று | 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும் |
| | | அதிக பட்ச வயது 35 க்குள் |
| | தொகுப்பு ஊதியம் | ரூ.12000/–பயணப்படி ரூ.750/– மொத்தம் ரூ.12750/– |
| 2 | பாலினம் | பெண்கள் மட்டும் |
| 2. | காலிப்பணியிடங்கள் விபரம் | |

| வ.எண் | வட்டாரம் | காலிப்பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆழ்வார்திருநகரி | 3 |
| 2. | கருங்குளம் | 1 |
| 3. | திருவைகுண்டம் | 2 |
| 4. | சாத்தான்குளம் | 2 |
| 5. | உடன்குடி | 1 |
| 6. | கயத்தார் | 3 |
| 7. | கோவில்பட்டி | 3 |
| 8. | ஓட்டப்பிடாரம் | 2 |
| 9. | புதூர் | 3 |
| 10 | விளாத்திகுளம் | 2 |
| | மொத்தம் | 22 |

| | | |
|---|---|---|
| 3. | கல்வித்தகுதி மற்றும் பிற தகுதிகள் | 1. இளங்கலை பட்டம் தேர்ச்சி மற்றும் கணினி MS Office குறைந்த பட்சம் 3 மாத சான்றிதழ் படிப்பு பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும் அல்லது Computer Science (OR) Computer Application ல் இளங்கலை பட்டம் தேர்ச்சி.<br>2. கணினி மென்பொருள் சார்ந்த கல்வித்தகுதி பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்<br>3. இருசக்கர வாகனம் உரிமம் பெற்றிருக்க வேண்டும் |
| 4. | முன் அனுபவம் | மக்கள் அமைப்பு சார்ந்த திட்டங்களில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |

1. விண்ணப்பதார் தூத்துக்குடி மாவட்டத்தில் காலிப்பணியிட வட்டாரத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்
2. கல்வித்தகுதி , இருப்பிடம் , ஜாதி சான்று, நன்னடத்தை சான்று, கணினி பயிற்சி பெற்றதற்கான சான்று மற்றும் முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்.

3. விண்ணப்ப படிவத்தில் உள்ள விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பிட வேண்டும் முழுமையாக பூர்த்தி செய்யபடாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்ட விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும்.
4. தகுதியில்லாத மற்றும் காலங்கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
5. எந்தவொரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு
6. தேர்வு/நேர்காணலில் கலந்து கொள்ள பயணப்படி ஏதும் வழங்கப்படாது
7. தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு தேர்வு /நேர்காணல் நடைபெறும் தேதி தனியே தெரிவிக்கப்படும்
8. நியமனத்தை ரத்து செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு உண்டு

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் அரசு வேலை நாட்களில் இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 வரை நேரிலோ அல்லது இணை இயக்குநர் /திட்ட இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு , மாவட்ட ஆட்சியரகம் (இரண்டாம் தளம்), கோரம்பள்ளம் –628101 தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரியில் பதிவு தபால் மூலமாக 16.10.2026 மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைத்திட வேண்டும்

வட்டார ஒருங்கிணைப்பாளர் காலிப்பணியிடத்திற்கான விபரங்கள் மற்றும் விண்ணப்ப படிவத்தை மாவட்ட இயக்க மேலாண்மை அலகு www.thoothukudi.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
தூத்துக்குடி மாவட்டம்